(2) இந்தப் பறவைகளை விற்பனை செய்வதற்கு தலைஞாயர், வேதாரணயம், முத்துப்பேட்டை பஞ்சாயத்து ஒன்றிப்பு எல்லைகளுக்கு வெளியே கொண்டுபோகக்கூடாது.

(3) இந்தச் சலுகையை தவறான முறையில் பயன்படுத்தாமலிருப்பதற்காக, சட்டப் பேரவை உறுப்பினர், பஞ்சாயத்து ஒன்றிப்புகளின் தலைவர்கள், கிராமப் பெருமக்கள், வனவிலங்கு பணியாளர் ஆகியோர் அடங்கிய குழு ஒன்று அமைக்க வேண்டும்.

(4) விவசாயத் துறை பொறுத்தமட்டில் பறவையினங்களைப் பற்றிய ஆராய்ச்சி நடத்த இந்திய விவசாய ஆராய்ச்சி மன்றத்தால் ஊக்குவிக்கப்படுகின்ற ஒரு திட்டம் உள்ளது. இந்த ஆராய்ச்சி மற்ற இடங்களோடு தலைஞாயரிலும் நடத்தப்பட வேண்டும்.

(5) இந்தச் சலுகைகளை 1968-69 பருவ காலத்தில் அமல் நடத்த வேண்டும். 1969 மார்ச் மாதத்தில் மறுபரிசிலனைக்கு எடுத்துக்கொள்ள வேண்டும்.

இந்தச் சிபாரிசுகளை அரசு ஒப்புக்கொண்டுள்ளது. கூடிய விரைவில் உத்தரவு பிறப்பிக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அடுத்து, 41-வது விதியின்கீழ் திரு. எம். சுரேந்திரன் அவர்கள் பொதுப் பணித்துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டுவரக் கூடிய தீர்மானம் பிறகு எடுத்துக்கொள்ளப்படும்.

5. அரசினர் தீர்மானம்.

உறுப்பினர் திரு. வ. ஜார்ஜ் மீதான வழக்குபற்றிய அவையுரிமைக் குழுவின் அறிக்கையை ஏற்றல்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அடுத்து, அவையுரிமைக் குழுவின் அறிக்கை ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டுமென்று மாண்புமிகு கல்வி-தொழில் அமைச்சர் அவர்கள் கோருவார்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்:

"மாண்புமிகு உறுப்பினர் திரு. வ. ஜார்ஜ் அவர்கள் பேரவையின் உரிமையை மீறியதாக ஏற்பட்ட வழக்குபற்றி 25—3—1968-ம் நாளன்று இப்பேரவைக்கு அளிக்கப்பட்ட அவையுரிமைக் குழுவின் அறிக்கை சட்டப் பேரவையின் 191 (b) விதியின்கீழ் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, அறிக்கை ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்:

"அவையுரிமைக் குழுவின் அறிக்கையில் கண்டுள்ள பரிந்துரைகளை சட்டப் பேரவையின் 191 (d) விதியின்கீழ் இப்பேரவை இசைந்து ஏற்றுக்கொள்கிறது."

1968 மார்ச் 26]

DR. H. V. HANDE: Sir, I want to suggest briefly one or two points in this connection.

Firstly, whenever Members get up and there is some confusion in the House, the request I make on behalf of my Party is that the Members be given some chance to express themselves in the House itself. If every case of this type is developed to the level of this case, unnecessarily the feelings of the Members will be very much aroused and unnecessarily we will be giving importance to these small things. That is why I suggest, without commenting upon the conduct of the Speaker for whom we have got the highest respect, that whenever such incidents occur hereafter, they need not be developed to the extent of referring the matter to the Committee and printing a report, etc. Then we will have to speak in fear of being caught. Once a Speaker gives a ruling, we cannot question it. This is my request to the House.

A privilege motion was given notice of by Thiru S. Balasubramanian and Thiru K. M. Ramaswami Gounder about the comments on a speech made by Thiru R. Krishnasamy Gounder. It has not yet been taken up. We feel that it is a very important privilege issue.

In connection with this motion, I thought I could offer my suggestions for the consideration of the Leader of the House.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, கனம் உறுப்பினர் கூறுகின்ற கருத்துக்களின் அடிப்படையிலே தான் எந்த ஒரு பிரச்சினை வந்தாலும், நமது நடைமுறையை யொட்டிய எண்ணங்கள், நல்ல மரபுகளைக் காப்பாற்ற வேண்டு மென்ற அடிப்படையில்தான் இந்த முடிவுகளை எடுக்கிறார்கள். கனம் உறுப்பினர் அவர்களும் அவையின் மரபுகளைக் காப்பாற்று கின்ற வகையில் சில கருத்துக்களை எடுத்துச் சொல்லி வரு கிறார்கள். உறுப்பினர் அவர்களுடைய ஆலோசனைகள் அவைத் தலைவரின் கவனத்தில் கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டது.

6. 1968-69-ம் ஆண்டிற்கான நிதிக் கோரிக்கைகள்மீது வாக்கெடுப்பு —தொடர்ச்சி.

கோரிக்கை எண் 9—மாவட்ட நிர்வாகமும், பல்வகையும்.

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை: தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின்மேல் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்:—

"கோரிக்கை எண் 9—'மாவட்ட நிர்வாகமும், பல்வகையும்' என்ற தலைப்பின்கீழ் ரூ. 16,90,15,100-க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டும்."